GML

# வணக்கம் ரோட்டரி


BOOK-POST

VANAKKAMM ROTARY - DISTRICT 2982

மாவட்டம் 2982

தமிழ் மாத இதழ்


| மலர் - 1 | இதழ் - 3 | செப்டம்பர் 2025 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ. 10/- |
|---|---|---|---|---|
| Volume - 1 | Issue - 3 | September 2025 | Tamil Monthly | Price : Rs. 10 |


Our DG @ Lead25

Rotary

TEAM UNIQUE

தனித்துவமாக தன்னலமற்ற

Rotary District 2982 2025-26

# ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

## இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு

**மாரடைப்புக்கான நவீன பைபாஸ் அறுவை சிகிச்சைகள்**
(Beating Heart Bypass Surgeries)

**இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சைகள்**
(Valve Repair, Replacement Surgeries)

**சிக்கலான இருதய அறுவை சிகிச்சைகள்**
(Complicated Heart Surgeries, Re Do Surgeries)

**மகாதமனி சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகள்**
(Aortic Dissection, Aneurysmal Surgeries)







**எக்மோ (ECMO) வசதிகளை கொண்ட இருதய தீவிர சிகிச்சைப் பிரிவு**

**முழு நேரமும் செயல்படும் அவசர சிகிச்சைப் பிரிவு**

**ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை**

202, பெங்களூர் பை-பாஸ் ரோடு. சேலம் - 636 004. Ph: 0427-2338800

# பிரதியினுள்....





**08**
Star Project




**10**
Lead 25



**14**
DISTRICT MEMBERSHIP SEMINAR
“சிற்பி”



**19**
மாவட்டத்தின் பெருமை



**20**
மாவட்ட ஆளுநரின் “முதல் அதிகாரப்பூர்வ விஜயம்”




**22**
சங்க திட்டங்கள்



**24**
சுதந்திரதின விழா கொண்டாட்டம்



**26**
மாவட்ட நிகழ்வுகள்

# வணக்கம் ரோட்டரி



இந்த இதழ் எனக்கு மிகவும் சவாலான ஒன்றாக அமைந்தது. அதற்குக் காரணம், நம் சங்கத் தலைவர்கள் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்களின் ஆர்வமும் செயல்பாடுமே. நமது மாவட்ட ஆளுநரின் எல்லை கடந்த அன்பிற்கு ஏற்ப, சங்கத் தலைவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளனர். நிர்ணயிக்கப்பட்ட பத்தியின் எண்ணிக்கைக்குள் அடக்க முடியாத அளவுக்கு திட்டங்களும் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

இதற்குப் பின்னால் உழைத்த அனைத்து தலைவர்களுக்கும் எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும். இந்த நேரத்தில், தலைமைத்துவம் பற்றிய என் அனுபவங்களை உங்களுடன் பகிர விரும்புகிறேன்.

ஒரு தலைவன் எதற்காக, எப்படிப் பிறக்கிறான்?

“எதற்கு” என்பதை இரண்டு கோணங்களில் பார்க்கலாம்:

ஒன்று, சமூகத்தில் நல்லவற்றைச் செய்யவும், சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்கவும்.

இரண்டு, சமூகத்தில் பிரச்சனைகளை உருவாக்கி, அதன்மூலம் தலைமைத் தன்மை பெறுவதற்காகவும்.

அரசியல், கலை, கல்வி, வியாபாரம் உள்ளிட்ட துறைகளில் இத்தகைய தலைவர்கள் இருக்கலாம். ஆனால் ரோட்டரியில் அதற்கு இடம் இல்லை என்பதே உண்மை.

சில நாட்களுக்கு முன்பு, “சிஸ்டம் சரியில்லை” என்ற வார்த்தை ஒரு பிரபலமானவரால் சமூக ஊடகங்களில் மிகப்பெரும் வைரலானது. அது பல நிறுவனங்களுக்கும் துறைகளுக்கும் பொருத்தமான ஒன்று தான் . ஆனால் 1905-ல் தொடங்கி இன்றளவும் ஒழுக்கமும் நெறிமுறையும் கொண்டு முன்னேறி வரும் ஒரு தன்னார்வு நிறுவனம் என்றால் அது நம் ரோட்டரியும் அதன் வெற்றிக்கு காரணம் அதன் “சிஸ்டமும்” தான்.

ரோட்டரியில், RI தலைவர், மாவட்ட ஆளுநர் அல்லது சங்கத் தலைவர் யாராக இருந்தாலும், ஒருவரால் ஒரு ஆண்டு மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும். இது பொதுவான அரசாங்கத்தைப் போல நிரந்தர ஆட்சி செய்ய இயலாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, அரசாங்கங்காலும் செய்ய இயலாத பல காரியங்களை ரோட்டரி செய்து வருகிறது. பல நேரங்களில் அரசாங்கமே நமது ரோட்டரியைச் சார்ந்திருப்பதும், நமது சிஸ்டத்தின் வலிமைக்கான சான்றாகும்.

சமூக நலனுக்காக பல தசாப்தங்களாக உழைக்கும் ரோட்டரியின் வெற்றியின் அடிப்படைத் தூண் தலைமைத்துவம் ஆகும். அதன் தலைவர்கள் இரண்டு வகையாக உருவாகிறார்கள்:

1. பொறுப்பை இலக்காகக் கொண்டு தலைமைத்துவத்தை அடைபவர்கள்.
2. எதிர்பாராமல் பொறுப்பை ஏற்கும் நபர்கள்.

ரோட்டரியில், இவ்விரு வகைத் தலைவர்களும் சக உறுப்பினர்களின் ஒத்துழைப்பாலும் ஈடுபாட்டாலும் வெற்றிகரமாக செயல்பட முடிகிறது.

ரோட்டரி இன்டர்நேஷனலும், மாவட்ட நிர்வாகமும் தலைவர்களை உருவாக்க பல உத்திகளை கையாளுகின்றன. அந்த வழியில், நமது மாவட்டம் 2982 Uniquez Team, 2024 நவம்பர் மாதம் முதலே மாவட்ட ஆளுநர் Er. P. சிவசுந்தரம் தலைமையில், தலைமைத்துவ மேம்பாடு மட்டுமல்லாமல் செயல்பாடுகள், பின்னடைவுகள், எதிர்காலத் திட்டங்கள் போன்ற அனைத்தையும் பக்குவமாக கட்டமைத்து முன்னோக்கி செல்கிறது.

“ஒரு தலைவன் என்பவன், பல தலைவர்களை உருவாக்குபவன்” என்ற அடிப்படையில், நம் மாவட்டம் கவனம் செலுத்தி வருகிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

முன்னாள் தலைவர் என்ற முறையில், சங்கத் தலைவர்களின் பொறுமையையும் பெருமையையும் நான் உணர்ந்திருக்கிறேன். அந்த அனுபவம் அவர்களின் வாழ்க்கைக்கும் நிச்சயம் உதவும்.

நல்லதை நினைப்போம், நல்லதைப் பேசுவோம், நல்லதைச் செய்வோம்.

நன்றி !

ரோட்டரி சேவையில்,

**Rtn. Hemanath**

**GML Editor**



# ரோட்டரி பன்னாட்டு தலைவரின் செய்தி

இந்த மாதம் ரோட்டரியில் "**அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு**" மாதமாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்திலும் கற்றலின் அடித்தளத்தை வலுப்படுத்த வேண்டும் என்பது நமது பொறுப்பு. உலகம் முழுவதும் இன்னும் கோடிக்கணக்கானோர் கல்வி வாய்ப்புகள் இன்றி உள்ளனர். இதற்கு தீர்வு - தடையற்ற, உள்ளடக்கிய மற்றும் சமமான கல்வி, குறிப்பாக பெண்கள் மற்றும் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களுக்காக.

எழுத்தறிவு என்பது வாசித்தலும் எழுதுதலும் மட்டுமல்ல; அது மனித கண்ணியத்திற்கும், வாய்ப்பிற்கும், அமைதிக்கும் ஒரு பாதையாகும். ஒவ்வொரு வகுப்பறையும், திறந்த புத்தகமும், பயிற்சி பெற்ற ஆசிரியரும் அமைதியெனும் கட்டிடத்தின் சுவராகின்றனர்.

இந்த ஆண்டின் கருப்பொருள் **"Unite for Good – நன்மைக்காக ஒன்றுபடுவோம்"** என்பதன் மூலம், நமது சங்கங்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் நீடித்த மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை நான் நம்புகிறேன். கல்வி திட்டங்கள் ஓராண்டுக்கு மட்டுமே அளவிடப்படக்கூடாது; எழுத்தறிவு முயற்சிகள் வேரூன்றி வளர நேரம் தேவைப்படும்.

ரோட்டேரியன்கள் தைரியமாகவும் புதுமையாகவும் சிந்திக்க வேண்டும். கல்வியில் ஆர்வமுள்ள புதிய உறுப்பினர்களை வரவேற்று, அனுபவமிக்க உறுப்பினர்களின் வழிகாட்டுதலோடு நூலகங்கள் அமைத்தல், பாடநூல்கள் வழங்குதல், மாணவர்களுக்கு வழிகாட்டுதல் போன்ற திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும். ஒவ்வொரு கல்வி உதவித்தொகையும், குழந்தை பருவக் கல்வி முயற்சியும், பெரியோருக்கான எழுத்தறிவு வகுப்பும் அமைதிக்கான செயலாகும்.

இறுதியில், எழுத்தறிவு என்பது அணுகல் பற்றியதல்ல, அது சமத்துவம் பற்றியது. சமூகம், மொழி மற்றும் பின்னணி எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு நலிந்த சமூகமும் அதன் திறனை அடைய வாய்ப்பு பெற வேண்டும். கல்வியின் மூலம் வாழ்வினை மாற்றி உண்மையில் **"Unite for Good"** என்ற ரோட்டரியின் மந்திரத்தை உண்மையாக்கலாம்.

நன்றியுடனும் அன்புடனும்,

**Francesco Arezzo**

President, Rotary International, 2025-26



# மாவட்ட ஆளுநர் செய்தி

அன்பிற்குரிய **UNIQUEZ** சங்க தலைவர்களே, செயலாளர்களே

கடந்த மாதம் நமது மாவட்டம் 2982விற்கு நினைவு கூறத்தக்க முன்னேற்றங்களும், ஊக்கமளிக்கும் தருணங்களும் நிறைந்திருந்தது. இது நிலையான மதிப்பை உருவாக்கும் சேவைத் திட்டங்களாலும், நம் இயக்கத்தின் தலைமைத்துவ வலிமையையும், ஒற்றுமையையும் பிரதிபலிக்கும் முக்கிய நிகழ்வுகளாலும் நிறைந்ததாக இருந்தது.

மாவட்டத்தின் முதல் **GOV,** அதாவது சங்கங்களுக்கான, மாவட்ட ஆளுநரின் முதல் அதிகாரப்பூர்வ வருகை, **RC Namakkal Poultary Town** சங்கத்தின் வாயிலாக துவங்கியது. பிரசித்திபெற்ற நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர், நாமகிரி தாயார் மற்றும் நரசிம்ம பெருமான்களை வணங்கி ஆரம்பிக்கப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்வு, குடும்பங்கள் கொண்டாடும் ஒரு திருவிழா போன்ற மகிழ்ச்சியை தந்தது. அன்றைய தினம், **RC Namakkal Poultry Town (RID 2982)** மற்றும் **RC Juranda (RID 4630)** இணைந்து, நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சுமார் 24 இலட்சம் மதிப்பில் மேம்பட்ட மருத்துவ உபகரணங்களை வழங்கும் விழாவும் அரங்கேறியது. இது, ரோட்டரி எப்போதும் சமூகத்தின் தேவைகளுக்கு, சுகாதார சேவைகளில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

கடந்த மாதத்தின் மிகுந்த மகிழ்ச்சியளித்த முன்னேற்றங்களில் ஒன்று திண்டிவனத்தில் புதிய ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு புதிய சங்கமும் எண்ணிக்கையில் வளர்ச்சியை மட்டும் குறிக்காது, ரோட்டரியின் சேவை, நம்பகத்தன்மை மற்றும் நட்பு விரிவடைவதையும் உறுதிப்படுத்துகிறது.

ஆத்தூர் மிட்டவுன் ரோட்டரி சங்கம் ஆரோக்கியம், உற்சாகம் மற்றும் சமூக உறவுகளை ஒருங்கிணைக்கும் வகையில் ஒரு மாறத்தான் **(Marathon)** நிகழ்ச்சியை நடத்தியது. அதேசமயம், ஓசூர் சிப்காட் ரோட்டரி சங்கம் ஆறு **Endowment** பங்களிப்பை வழங்கியுள்ளது நமது மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் விஷயமாகவும், சமூகத்திற்கு நீண்ட காலப் பலன்களை ஏற்படுத்தும் சேவையாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த மாதத்தில், ரோட்டரி மண்டலம் 5ன் இயக்குநர் **Rtn.** முருகானந்தம் **@ MMM** அவர்கள் தலைமையில் நடைபெற்ற **LEADS 25** நிகழ்ச்சியில் 600-க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள் நமது மாவட்டத்தின் சார்பாக பங்கேற்றது, பல்வேறு இடர்களுக்கு இடையே, நமது பங்களிப்பையும், ஒற்றுமையையும் உறுதி செய்கிறது. இந்த நிகழ்வு, ரோட்டரியின் தலைமைத்துவமும், கல்வியும், நண்பகத் தொடர்பும் எவ்வாறு ஊக்குவிக்கப்படுகின்றன என்பதை வலியுறுத்திய நினைவாக மாறியது.

மாவட்டம் முழுவதும் அனைத்து சங்கங்கள் சமூக நலனுக்காக முக்கியமான திட்டங்களை மேற்கொண்டன. அவற்றில் சில சிறிய அளவிலிருந்தாலும், சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ரோட்டரியின் உண்மையான உயிர்த்துடிப்பு இதுவே.

ரோட்டரியின் நிறுவனர் பால் ஹாரிஸ் கூறியதைப் போல, **“Whatever Rotary may mean to us, to the world it will be known by the results it achieves.”** கடந்த மாதத்தின் சாதனைகள், நோக்கம் நிறைந்த உறுதியுடன் சேவையில் உயிர்ப்புடன் இருக்கும் மாவட்டத்தை உலகிற்கு வெளிப்படுத்தியது. எதிர் வரும் நாட்களில், அனைத்து சங்கங்களும், பல்வேறு நலதிட்டங்களை, சாதனைகளை செயல்படுத்தி சங்கத்திற்க்கும், மாவட்டத்திற்க்கும் பெருமை சேர்க்க செயல்பட அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுவது

உங்கள் அன்பு நண்பர்,

**Rtn. Er. P. சிவசுந்தரம்**

# District Councellor's Message



அன்புள்ள ரோட்டரி நண்பர்களுக்கு,

இந்த வருடம் என்னை District 2982 Councellor-ஆக நியமித்து அதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் நல்கும் நமது மாவட்ட ஆளுநர் Rtn. Er. P . சிவசுந்தரம் அவர்களுக்கு என் முதற்கண் பாராட்டுகளும், வாழ்த்துக்களும்.

மேலும் நம் 2982 மாவட்டத்தின் UNIQUEz Team-ற்கும், ஒவ்வொரு மாதமும் மாவட்ட நிகழ்வை ஆர்வத்தோடு படிக்கும் வண்ணம் உள்ளபடியே தனது தனித்துவ சிந்தனையோடு அனைத்து உறுப்பினர்களுக்கும் Governors Monthly Letter - "வணக்கம் ரோட்டரி" வாயிலாக கொண்டு சேர்க்கும் Rtn . ஹேமந்த் மற்றும் Publication Team - ற்கும் எனது பாராட்டுக்கள்.

நமது ரோட்டரி குடும்பத்தினரிடம் உரையாடுவது எப்போதும் பெருமையும் மகிழ்ச்சியுமான விஷயமாகும். ரோட்டரி, எல்லைகளைத் தாண்டி மனிதகுலத்திற்கு சேவை செய்யும் தனிப்பட்ட வாய்ப்பை நமக்குத் தந்துள்ளது. ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு சேவைச் செயல்பாடும், ஒவ்வொரு நட்புறவுக் கணமும் உண்மையான ரோட்டரி உணர்வை வெளிப்படுத்துகின்றன.

ஒவ்வொரு ரோட்டேரியனும் உறுப்பினர் வளர்ச்சியைக் கவனித்து, புதிய சிந்தனைகளை அங்கீகரித்து, நிலையான சேவைத் திட்டங்களை செயல்படுத்தி, சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ரோட்டரி என்பது சேவை மட்டுமல்ல; அது நட்பு, தலைமைத்துவம், மற்றும் தனி மனிதனின் வளர்ச்சிக்கும் ஒரு வாய்ப்பு என்பதையும் நினைவில் கொள்வோம்.

இன்று நாம் ஏற்றும் நம்பிக்கை தீபம், நாளைய தலைமுறைக்கும் இன்னும் பிரகாசமாகப் பொலிவூட்டும் வகையில், புதுப்பித்த உற்சாகத்துடனும் குறிக்கோளுடனும் ரோட்டரி சக்கரத்தை முன்னோக்கி நகர்த்தும்.

தொடர்ந்த வெற்றிகள் பெற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்,

**Rtn. PDG. Dharmesh R. Pattel**
**District Concellor, RID 2982**

# உதவி ஆளுநராகிய நான்...

## Rtn. S. அன்பழகன், D.M.E.,



என் வாழ்க்கையில் சமூக சேவையின் விதை 2013 ஆம் ஆண்டு விதைக்கப்பட்டது. அன்றுதான் நான் RC ராசிபுரம் குடும்பத்தில் இணைந்தேன். அந்தச் சிறிய தொடக்கம், இன்று என் வாழ்க்கையின் மிகப்பெரிய பயணமாக வளர்ந்துள்ளது.

ரோட்டரியின் ஒவ்வொரு வாய்ப்பும் என்னை புதிய பொறுப்புகளுக்கும் அனுபவங்களுக்கும் அழைத்துச் சென்றுள்ளது. 2017-2018-ல் சங்க உறுப்பினர் தலைவராகவும், 2021-2022-ல் சங்க தலைவராகவும் பணியாற்றும் போது, மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ரோட்டரி சக்தியை நேரில் கண்டேன். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் மாவட்ட Sergeant-at-Arms பதவியில் இருந்து, ஒழுங்கும் ஒற்றுமையும் எவ்வளவு முக்கியம் என்று உணர்ந்தேன்.

2021-2022-ம் ஆண்டில், மாவட்டம் 2982 வழங்கிய சிறந்த தலைவர் விருது என் முயற்சிகளுக்கான பெருமையான அங்கீகாரம். அந்த ஆண்டில், ரோட்டரி அறக்கட்டளைக்கும் போலியோ ஒழிப்பு முயற்சிக்கும் மொத்தம் 4,000 அமெரிக்க டாலர் நிதி அளித்தேன். மேலும் RI President பாராட்டுச் சான்றிதழ் பெற்றது, என் சேவைப் பயணத்தில் இன்னொரு முக்கியக் மைல் கல்.

என் கல்விப் பயணம் 1986-ல் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளோமாவுடன் முடிந்தாலும், என் கற்றல் அங்கு நிற்கவில்லை. 1991-ல் GTP Exports Pvt. Ltd. நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றத் தொடங்கி, 1994'ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் இளங்கலை பொறியாளராக சேர்ந்தேன். அங்கு 1999'ல் பொறியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், 2001-2002ல் தமிழ்நாடு பொறியாளர் சம்மேளனத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றினேன்.

பின்னர் அரசுப் பணியை விட்டு, எனது சொந்த கனவுகளைத் தொடர P.A. Projects என்ற நிறுவனத்தை தொடங்கினேன். நிலம் அகழும் இயந்திரங்கள், பொறியியல் ஒப்பந்தப் பணிகள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் நாடுகளில் இருந்து கனரக கட்டுமான இயந்திரங்களை இறக்குமதி செய்வது என் தொழிலின் முக்கிய அம்சங்களாக அமைந்தது. 2022ல், சேலத்தில் ARS Motors என்ற கைனெடிக் கிரீன் மின்சார வாகன ஷோரூமை தொடங்கியதில், எனது தொழில் முயற்சிகள் ஒரு புதிய அத்தியாயத்தை கண்டது.

நான் 14 மே 1968 அன்று பிறந்தேன். 1998 ஆகஸ்ட் 28 அன்று, என் வாழ்க்கைத் துணை திருமதி கே. சங்கீதா (B.Sc., B.Ed.) அவர்களைத் திருமணம் செய்து கொண்டேன். எங்கள் மகன் S.A. ரெதிக், B.Com பட்டதாரி; அவர் இன்று எங்கள் குடும்ப வணிகமான P.A. Projects மற்றும் ARS Motors நிறுவனங்களில் பங்குதாரராகப் பணியாற்றுகிறார்.

சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, ஜப்பான் போன்ற பல நாடுகளுக்கு பயணம் செய்த அனுபவம், உலகம் எவ்வளவு வித்தியாசமானதோ, அதே சமயம் எவ்வளவு இணக்கமானது என்பதைக் கற்றுத் தந்தது.

என் வாழ்க்கைப் பயணம், வெறும் தொழில் வெற்றியோ, விருதுகளோ அல்ல - அது மனிதர்களுடன் இணையும் தருணங்கள், நம்பிக்கையை விதைக்கும் செயல்கள், மற்றும் ரோட்டரியின் நெறியை வாழ்ந்து காட்டும் ஓர் அனுபவமாகும்.

**Rtn. S. அன்பழகன், D.M.E.,**
**Assistant Governor, Zone - 5**
**Rotary Club of Rasipuram**

# "உதவி ஆளுநராகிய நான்..."

## Rtn. L. பிரதீப் குமார்

நான் L. பிரதீப் குமார், தர்மபுரி மிட் டவுன் ரோட்டரி சங்கத்தின் சார்பாக உதவி ஆளுநர் - மண்டலம் 14 (2025-26) பொறுப்பில் பணியாற்றும் பெருமை பெற்றுள்ளேன். என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் வளர்ச்சி, சேவை மற்றும் மக்களுடன் அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கும் எண்ணத்தால் வழிநடத்தப்பட்டது.

**கல்வி மற்றும் தொழில் பயணம்**

என் கல்வி பயணம் B.Sc., பட்டத்துடன் தொடங்கி, அதன் பின் M.B.A,. பட்டம் பெற்றேன். தொழிலில், கோயம்புத்தூரில் DNC Chits Pvt Ltd நிறுவனத்தின் Operations Head ஆக பணியாற்றி வருகிறேன். அதோடு, LPK Motors மற்றும் BGauss EV Scooters நிறுவனங்களின் நிர்வாக இயக்குனராகவும், Tadka Kitchen மற்றும் F2O Foods நிறுவனங்களின் நிர்வாக பங்குதாராகவும் உள்ளேன். நிதி, வாகன உற்பத்தி, மற்றும் உபசரிப்பு போன்ற பல துறைகளில் கிடைத்த அனுபவம், எனக்கு பரந்த பார்வையும் வலுவான மேலாண்மைத் திறன்களையும் வழங்கியுள்ளது.

**அனுபவமும் அடையாளமும்**

இருசக்கர வாகனத் துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவம், கடின உழைப்பும் நம்பிக்கையும் உறவுகளும் நீடித்த வெற்றியின் அடித்தளங்கள் என்பதை உறுதியாக உணர்த்தியது.

**ரோட்டரி பயணம்**

2001ஆம் ஆண்டு ரோட்டரியில் இணைந்தேன். அப்போது என் சங்கத்தின் சாசன தலைவர் ஆக பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது பெருமையாகும். சேவைத் திட்டங்களும் உறவுகளை வலுப்படுத்தும் நிகழ்வுகளும் எனது ரோட்டரி வாழ்க்கையின் மையமாக இருந்தன. வணிக வலையமைப்பிலும், சமூக சேவையிலும் மக்களை ஒருங்கிணைக்கும் திறனுக்காக நான் அவ்வப்போது பாராட்டுகளை பெறுகிறேன்.

**குடும்பம் - என் வலிமை**

என் மனைவி P. புவனேஸ்வரி (B.Com) எப்போதும் எனக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். எங்கள் மகள்கள் - P.B. சஞ்சு ஸ்ரீ (பயோமெடிக்கல் இன்ஜினீயரிங்- Providence, America) மற்றும் P.B. நிஹாச்ரி (B.Tech ஃபேஷன் டெக்னாலஜி) - இது எங்கள் குடும்பத்தின் பெருமையாகும்.

**ஆர்வமும் நோக்கும்**

தர்மபுரியில் வசிக்கும் நான், வலையமைப்பு, சமூக சேவை, மற்றும் தாக்கமுள்ள நிகழ்வுகளை நடத்துதல் ஆகியவற்றில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டவன். மனிதர்கள் ஒன்றிணைந்து கருத்துகளைப் பகிர்ந்து, ஒருவருக்கொருவர் ஊக்கமளித்து, சமுதாயத்திற்கு நல்லதை செய்யும் சூழலை உருவாக்க வேண்டும் என்பதே என் நம்பிக்கை.

**என் வாக்குறுதி**

**உதவி ஆளுநராக, என் அனுபவம், ஆற்றல் மற்றும் ஆர்வத்தை "Service Above Self" என்ற ரோட்டரி கொள்கையை முன்னேற்ற பயன்படுத்துவேன்.**

**"வெற்றியை தனியாக அடைவது மகிழ்ச்சி அளிக்கலாம்; ஆனால் அதை பகிர்வதே உண்மையான மகிழ்ச்சி."**

**Rtn. L. பிரதீப் குமார்**
**Assistant Governor, Zone - 14**
**Rotary Club of Dharmapuri Midtown**



STAR PROJECT

# ஆத்தூர் மிட்டவுன் ரோட்டரி சங்கம் நடத்திய போதை பொருள் விழிப்புணர்வு மாரத்தான்

ஆத்தூர், 17 ஆகஸ்ட் 2025 – ரோட்டரி ஆத்தூர் மிட்டவுன் சங்கம் சார்பாக, இரண்டாம் முறையாக நடைபெறும் மாரத்தான் போட்டி, ஆத்தூர் **PWD** மைதானத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. மாரத்தான் காலை 6:00 மணிக்கு தொடங்கி, நகரத்தின் பல பகுதிகளை சுற்றி வெற்றிகரமாக நடைபெற்றது. 900 மேற்பட்ட பொதுமக்களும், தன்னார்வலர்களும் பங்கேற்றனர்.

நிகழ்வை சங்க தலைவர் **Rtn. V.** நரசிம்ம குமார் துவக்கி வைக்க, உதவி ஆளுநர் **Rtn. R.** சீனிவாசன் முன்னிலையில், மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்துக்கொண்டு சிறப்பாக கௌரவிக்கப்பட்டார்.

இந்த மாரத்தான் இரண்டு பிரிவுகளில் நடைபெற்றது. பெண்கள் பிரிவு 7 கிமீ தூரம் K.C. சதீஸ்குமார் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் துவங்கபட்டது. ஆண்கள் பிரிவு 15 கிமீ தூரம் R.V. ஆத்தூர் ஸ்ரீராம் குமரன் பஸ் சர்வீஸ் நிறுவனரால் துவங்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இரா. தமிழ்மணி, உள்ளாட்சி உறுப்பினர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். நிகழ்வு **Rtn. J.K.** சுரேஷ் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டு திட்ட குழுவினர் உதவியுடன் சிறப்பாக நடைபெற்றது.

போட்டியில் வென்றவர்களுக்கு முதல் பரிசு ரூ.20,000 (ஆண்கள் 15 கி.மீ, பெண்கள் 7 கி.மீ), இரண்டாம் பரிசு ரூ.15,000, மூன்றாம் பரிசு ரூ.10,000 நான்காம் பரிசு ரூ.5,000 என மொத்தம் ரூ.1,00,000 வழங்கப்பட்டது.




மேலும், அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் டீசர்ட் மற்றும் சான்றிதழ் கொண்ட **Kit Bag**-ம் வழங்கப்பட்டது.

போதை பொருள் விழிப்புணர்வுக்காக நடைபெற்ற இந்த நிகழ்வு அப்பகுதியில் மிகப்பெரிய வரவேற்பைப்பெற்றது.









ROTARY INTERNATIONAL DISTRICT-2982




ROTARY INTERNATIONAL DISTRICT-2982
ROTARY CLUB OF ATTUR MIDTOWN
Marathon-2025
MARATHON 2025













AIM HIGH
Lead25
ROTARY INDIA LEADERSHIP CONCLAVE
RI Zones 4, 5, 6 & 7 | 23-24 August '25 | Chennai Trade Centre, Tamil Nadu

# ரோட்டரி இந்தியா லீடர்ஷிப் கான்க்ளேவ்: தலைமையும், ஊக்கமும், பார்வையும் ஒருங்கிணைந்த விழா

2025 ஆகஸ்ட் 23 மற்றும் 24 தேதிகளில், சென்னை டிரேட் சென்டர் 12,000-க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்களும் தலைவர்களும் ஒன்று கூடிய பெரும் மாநாட்டாக மாறியது. “AIM HIGH” என்ற தொனிப்பொருளோடு நடைபெற்ற இந்த LEAD 25 – ரோட்டரி இந்தியா லீடர்ஷிப் கான்க்ளேவ் ரோட்டரியின் Service Above Self என்ற அடிப்படை மதிப்புகளை மறுபடியும் வலியுறுத்தியது.

**1. சிறப்பு விருந்தினர்கள்**

இம்மாநாட்டில் பல்வேறு துறைகளின் தலைசிறந்தவர்கள் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர் :

**Rtn. Francesco Arezzo,** RI President (2025–26)

திரு. உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

**2. முக்கிய உரையாற்றிகள்**

மாநாட்டில் பங்கேற்ற சில புகழ்பெற்ற பேச்சாளர்கள் மற்றும் தலைவர்கள்:

டாக்டர் சௌந்தர்யா ராஜேஷ் – பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமூக தொழில் முனைவில் புகழ்பெற்றவர்.

திருமதி. கீர்த்தி ஜெயகுமார் – சமத்துவம், அமைதி கல்வி மற்றும் சமூக செயற்பாட்டாளர்.

திரு. ஜே. ராஜீவ் சௌத்ரி – நடிகர், இயக்குனர் மற்றும் கார்ப்பரேட் பயிற்சியாளர்.

திரு. சஞ்சய் பிண்டோ – சட்டவியலாளர் மற்றும் பொது பேச்சாளர்.

டாக்டர். மோகன் காமேஸ்வரன் – காது, மூக்கு, தொண்டை அறுவைசிகிச்சை நிபுணர், பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

திரு.விஸ்வநாதன் – ஊக்கமளிக்கும் பேச்சாளர் மற்றும் எழுத்தாளர்.

**சிறப்பம்சம்**

மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. கமல் ஹாசன் அவர்களுக்கு Lifetime Achievement Award வழங்கப்பட்டது.

இம்மாபெரும் நிகழ்வை Rtn. AKS Er. முருகானந்தம் (MMM) அவர்கள் ஒருங்கிணைப்பாளராகவும், Rtn. AKS. Nagesh அவர்கள் இணை ஒருங்கிணைப்பாளராகவும் சிறப்பாக செயல்படுத்தினர்.








TRF CELEBRATION


Rotary
Lead25
Chief Guest
Presidential Address
Guest of Honour


Chief Guest
Presidential Address
Guest of Honour




Lead25




A LIFE



# Fellowship Chapter – RAAGAM




நமது ரோட்டரி மாவட்டம் 2982 பெருமையுடன் புதிய **Fellowship Chapter – RAAGAM (International Fellowship of Rotarian Musicians - IFRM)** ஒன்றை தொடங்கியுள்ளது. இந்த அத்தியாயம், இசையை நேசிக்கும் ரோட்டேரியன்களை ஒருங்கிணைத்து, இசையின் உலகமயமான மொழி மூலம் உறவையும் சேவையையும் வலுப்படுத்தும் ஒரு சிறந்த தளமாக அமையும்.


**RAAGAM Fellowship Chapter** ரோட்டரி கொள்கை விதிமுறைகளுக்கிணங்க சுயாதீனமாக இயங்கவுள்ளது. இதன் துவக்க விழா கடந்த ஆகஸ்ட் 15 'ஆம் தேதியன்று, சிறப்பு விருந்தினராக Rtn. S. Padmanabhan – Global Chair IFRM அவர்களும் கௌரவ விருந்தினராக Rtn. Mahesh Rajan – Regional Co-ordinator, Zone-5 அவர்களும் நமது மாவட்ட ஆளுநர் Rtn. Er. P. Sivasundaram முன்னிலையில் நடைபெற்றது. இந்த Fellowship Chapter-க்கு சாசன தலைவராக Rtn. So. கண்ணன், RC Salem Junction அவர்களும், சாசன செயலாளராக Rtn. பிரவீன், RC Salem South அவர்களும் நியமிக்க பட்டுள்ளனர்.

மாவட்ட ஆளுநர் பேசுகையில் இது போன்ற Fellowship Chapter-களை Rotary International வெகுவாக ஊக்குவித்து வருகின்றது, அது RI விதிகளின் படி தான் செய்யப்படுமென்றும், இது போன்ற Fellowship Programme-ற்கு யாரும் நிரந்தரமான எந்த ஒரு பொறுப்பிலோ ஆலோசனை குழுவிலோ இருக்க முடியாதென்றும், அந்தந்த வருடத்தின் மாவட்ட ஆளுநரின் வழிகாட்டுதலின்படி தான் செயல்பட முடியுமென்றும், இதன் மூலம் ரோட்டேரியன்கள் தங்கள் ஆர்வத்தை பகிர்ந்து, மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் சேவையை பரப்ப ஒரு ஊடகமாக பயன்படுத்துவார்களெனவும் குறிப்பிட்டார்.

மேலும், இந்த சாதனையை சாத்தியமாக்க தங்கள் நேரமும் முயற்சியும் அர்ப்பணித்த அனைத்து ரோட்டேரியன்களுக்கும் நன்றிகளையும் பாராட்களையும் தெரிவித்துக்கொண்டார்.



# குறுக்கு எழுத்துப் போட்டி




திரைப்படங்களின் பெயர்களைக் கொண்டு ஒரு சிறு புதிர் அமைத்திட ரொம்ப நாள் ஆசை. விளைவு இது. இந்தத் திரைப்படங்களில் எவற்றை எல்லாம் பார்த்திருக்கிறீர்கள் என்றும் எனக்கு பகிரலாம்.

**இடமிருந்து வலம் :**

1. ஆகாயத்தின் எல்லையை எப்படியும் எட்டிப் பிடித்து விடுவான் (4)
3. மாவுப் பொருளுக்கு வண்ணம் கொடு (1,1)
7. ஒரு மதிப்பெண் கூட இழக்கவில்லை (5, 2)
9. நெற்றிப் பொட்டு (4)
10. உரக்கலவை சில களைகளையும் நீக்கியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி (3)
11. தான் நெற்றியில் சூடிய அணிகலனின் பெருமையை ஊரெல்லாம் முரசு அடித்துச் சொல்லாத குறைதான் (6)
12. சினிமா சினிமா என்ற பிதற்றல் தெளிவதற்குள் பங்குனியே வந்து விடுகிறது (2)
15. பாறை இடுக்கினுள் சற்றே உற்றுப் பார்த்தால் ஒரு பெரும் படையே தங்கியிருக்கிறது (3)
16. கம்பி திருடும் கள்வனைப் பார்த்ததும் கம்மென்று தப்பித்து வந்திடு (5)
17. ஓலைச் சுவடியில் எழுதும் பேனா? (2)

**மேலிருந்து கீழ்**

1. மொத்த விலை கொடுத்து சரடு வாங்கிக் கோர்த்தால் சங்க இலக்கிய புத்தகம் ஒன்று கிடைக்கிறது (2, 2)
2. முதல் இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு வந்த இல்லற வாட்டம் பந்த சொந்தங்களையும் குழப்பி, அறம் அறுக, பறக்க முடியாத பருவமாய் ஆக்கி விட்டது (5, 4)
4. மனதார கைகளுக்குள் பார்த்தால் விண்மீன் தெரியும் (3)
5. கூட்டணி கட்சிகளுடன் செய்யப்படும் ஒப்பந்தம் (3, 5)
6. வசீகரத்தால் அவளை மயக்கம் கொள்ளச் செய் (3,1)
8. நூல் அதிகம் சேர்ந்து விட்டதனால் தினம் போய் படிப்பது நலம் (4)
11. ஸ்டாலினுக்கும் விஜய்க்கும் சின்ன வித்தியாசம் தான் (4)
13. மிகச்சிறு வாணிபத்தில் பணம் ஆறாக ஓடுகிறது (4)
14. எடையைக் கொண்டு வெற்றிடம் நிரப்பு (2)

**இதற்கு விடை இதே பதிப்பில் ஒரு பக்கத்தில் உள்ளது.**

# DISTRICT MEMBERSHIP SEMINAR "சிற்பி"

**DISTRICT MEMBERSHIP SEMINAR -** "சிற்பி" 17 ஆகஸ்ட் 2025 அன்று சேலம் தொங்கும் பூங்கா அரங்கத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

**Rtn. Dr. Rajesh** வரவேற்புரை வழங்க, மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P. Sivasundaram** கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்தார்.




புதிய சங்கங்களை துடைங்கியவர்கள், அதிகமான உறுப்பினர்களை இணைத்த சங்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும், இரண்டு பேருக்கு மேல் மற்றும் குறைந்தது ஒருவரையாவது இணைத்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.




முதன்மை விருந்தினராக **Rtn. PDG. Y. Kumanan, Rotary Coordinator** மற்றும் கௌரவ விருந்தினராக **Rtn. PDG. K.S. Venkatesan, Asst. Rotary Coordinator** உரையாற்றினர். **Rtn. PDG. AKS Dr. A.K. Natesan, District Mentor Dt 2982 -Multi Utility Hall** திட்டம் குறித்து தகவல்களை வழங்கினார். **Rtn. DGE. C. Senthilkumar LEAD** 25 நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தினார். எதிர்வரும் 'சங்கல்பம்' **New Member Orientation** கருத்தரங்கு குறித்து **Rtn. Senthilvelavan** அறிவித்தார்.

திருமதி. கொங்கு சந்தாமணி சிறப்பு உரையாற்றினார். நிகழ்ச்சி Rtn. K. Ravikumar நன்றியுரை மூலம் நிறைவடைந்தது.

இந்த கருத்தரங்கம் **"Each one Bring One"** என்ற **Rotary Membership Growth**-ன் நோக்கத்தை முன்னிறுத்தியது.






















நமது "வணக்கம் ரோட்டரி" **GML-ன்** இரண்டாவது பதிப்பு, **Membership Seminar** "சிற்பி" கருத்தரங்கின்போது அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. பதிப்பினை **GML Editor Rtn.** ஹேம்நாத் வழங்கிட நிகழ்வின் சிறப்பு விருந்தினர் **Rtn. PDG. Y.** குமனன், **Rotary Coordintor** அவர்களும், நமது மாவட்ட ஆளுநர். **Rtn. P.** சிவசுந்தரம் அவர்களும் இணைந்து **PDG-க்கள்** முன்னிலையில் பதிப்பினை வெளியிட்டனர்.



# சில எளிய வீட்டு குறிப்புகள்....! 5



- ✦ பூண்டு, வெங்காயம் போன்றவைகளை நறுக்குவதால் கத்தியில் ஏற்படும் துர்நாற்றத்தை போக்க, சிறிதளவு உப்பை கத்தியில் தடவி குளிர்ந்த நீரில் கழுவவும்.
- ✦ காய்கறி மற்றும் பழங்களை சிறிதளவு வினிகர் கலந்த குளிர்ந்த நீரில் ஒரு சில நிமிடங்கள் போட்டு வைத்தால் கிருமிகள் இறந்து விடும்.
- ✦ வெயில் காலத்தில் எங்கு நோக்கினும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். வீட்டைக் கழுவும் போது நீரில் சிறிது உப்பைச் சேர்த்துப் பின்பு கழுவுங்கள்.காய்ந்த பின் அறையில் ஈக்கள் வராது.
- ✦ பால் பாத்திரத்தின் அடியில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்க பாத்திரத்தை முதலில் குளிர்ந்த நீரால் நன்கு கழுவ வேண்டும்.
- ✦ கோதுமை உள்ள பாத்திரத்தில் ஒரு கொத்து வெந்தயக் கீரையை போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.

**Ann. Udayanandhini**
**W/o. Rtn. S.V. Praveen, RC Salem South**

**இது போன்ற வீட்டு குறிப்புகளை தாங்களும் இப்பகுதியில் பகிரலாம்...**


**Rtn . Dr. Rajesh Dt. Membership Chair** அவர்கள்
**$2,50,000 (USD 250,000)** தொகையை
**The Rotary Foundation**-க்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த அரிய தாராளமும், சேவைக்கான அர்ப்பணிப்பும் காரணமாக, அவர் ஆர்க் கிளம்ப் சொசைட்டி (AKS) உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இது ரோட்டரியின் உயரிய மரியாதைகளில் ஒன்றாகும். சென்னையில் நடைபெற்ற **Leads 25** நிகழ்வில் **RI President Rtn. Francesco Arezzo** திருக்கரங்களால் கௌரவிக்கப்பட்டார் என்பது மேலும் பெருமைக்குரியது.



# செப்டம்பர் மாத ரோட்டரி தலைப்பு :

## “அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு மாதம்”




செப்டம்பர் மாதம் அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு என்ற கருப்பொருளை முன்னிட்டு, தனிநபர் மற்றும் சமூக வளர்ச்சிக்கான கல்வி மற்றும் எழுத்தறிவின் முக்கியத்துவத்தை ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னெடுத்து வருகிறது. எழுத்தறிவு என்பது அடிப்படை உரிமை, அது வறுமையை குறைக்கவும், உடல் நலத்தை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மற்றும் உலகளவில் அமைதியை நிலைநாட்டவும் உதவுகிறது.

**ஏன் செப்டம்பர்?**

ரோட்டரியின் கவனம்: அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு என்பது ரோட்டரி அறக்கட்டளையின் ஏழு முக்கிய கவனம் உள்ள பகுதிகளில் ஒன்றாகும். செப்டம்பர் மாதம் இதன் முக்கியத்துவத்தை விளக்க ஒரு சிறப்பு மாதமாகக் அமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய தாக்கம் : உலகம் முழுவதும் சுமார் 7 கோடி 75 இலட்சம் மக்கள் எழுத்தறிவு இல்லாமல் இருக்கின்றனர். இந்த மாதம் இந்த உலகளாவிய சவாலை கவனத்திற்கு கொண்டு வருகிறது.

**அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவின் நன்மைகள்**

வறுமை குறைப்பு : கல்வி மற்றும் எழுத்தறிவு திறன்கள் தனிநபர்களுக்கு பொருளாதார முன்னேற்றத்தை வழங்கும்.

ஆரோக்கியம் மற்றும் நலம் : எழுத்தறிவு, மாதிரிமருத்துவம் மற்றும் குழந்தைகள் இறப்புவிகிதத்தை குறைக்க உதவுகிறது.

பாலின சமத்துவம் : கல்வியில் பாலின வேறுபாடுகளை குறைத்து சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க உதவுகிறது.

சமூக வளர்ச்சி : கல்வி பெற்ற சமூகம், வலுவான குடிமக்கள், பொருளாதார வளர்ச்சியும் பெறுகின்றன.

**ரோட்டேரியன்கள் எவ்வாறு பங்கேற்கலாம் ?**

திட்டங்களை ஆதரிக்கவும் : கணினி மற்றும் தொழில்நுட்ப ஆய்வு மையங்கள், பள்ளிக்குப்பிறகு கற்றல் மையங்கள், நூலகங்கள் மற்றும் கல்வி வளங்களை உருவாக்குதல்.


முடிவுகளை சீராக்கவும் : கல்வியின் இடையூறுகளை அகற்றுதல், பெரியோரின் எழுத்தறிவின்மையை குறைத்து, பள்ளி வளங்களை பெரிதாக்குதல்.

அறிவூட்டல் : எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அமைதியான மற்றும் நிலையான சமுதாயத்தை உருவாக்க உதவவும்.

**இந்த முயற்சிகளில் ஈடுபட்டால், ஒவ்வொரு நபரும் வாசிக்க, கற்றுக்கொள்ள மற்றும் வளர வாய்ப்பு பெறும் உலகத்தை உருவாக்க முடியும்.**



# எனது நூலகம்




இந்த பகுதியில் **Paramahansa Yogananda** எழுதிய "ஒரு யோகியின் சுயசரிதம்" எனும் புத்தகத்தை பற்றிய எனது பார்வையும் அதன் தாக்கமும். இந்த புத்தகம் ஆன்மிக உலகில் ஒரு சிறந்த படைப்பாகும். 1946-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூல், பரமஹம்ச யோகானந்தரின் வாழ்க்கை மற்றும் ஆன்மிகப் பயணத்தின் நேரடி அனுபவங்களின் தொகுப்பாகும். இது மேற்கத்திய நாடுகளில் யோகா மற்றும் தியானத்தின் போதனைகளை அறிமுகப்படுத்திய ஒரு முக்கிய நூலாகக் கருதப்படுகிறது.

இந்த நூல் ஒரு சாதாரண வாழ்க்கை வரலாற்றுக் கதையை விட மேலானது. யோகானந்தரின் தனிப்பட்ட அனுபவங்கள் மூலம் கிடைத்த ஆன்மிகத்தின் ஆழமான கருத்துக்களை இது விவரிக்கிறது.

இதில் உள்ள சில முக்கிய அம்சங்கள்; ஒரு தனிப்பட்ட ஆன்மிகப் பயணமாகவும், குரு-சீடன் உறவை பற்றியும், கிரியா யோகத்தின் அறிவியல், துறவிகள் ஞானம் மற்றும் ஞானிகளுடனான சந்திப்புகள் குறித்து நமக்குள் உயிர்ப்பிக்க செய்கிறது

யோகானந்தர் இந்தியாவில் பல்வேறு துறவிகளையும் ஞானிகளையும் சந்தித்தது பற்றிய சுவாரஸ்யமான கதைகளால் இந்நூல் நிறைந்துள்ளது. அவரது குருவின் குருவான லாஹிரி மகாசயா, மற்றும் அழியாநிலை பெற்ற குரு பாபாஜி போன்றவர்களைப் பற்றியும் கதைகள் உள்ளன. அவர் கண்டதாகச் சொல்லப்படும் அற்புதங்களும், ஆன்மிக முன்னேற்றத்தால் அடையப்படும் ஆற்றல்களும் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்நூல் வெளியிடப்பட்டதிலிருந்து, இன்றுவரை தொடர்ந்து அதிகம் விற்பனையாகும் புத்தகமாக உள்ளதுடன், ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1999-ஆம் ஆண்டில், எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்கள் கொண்ட குழு ஒன்றால், இது "நூற்றாண்டின் 100 சிறந்த ஆன்மிகப் புத்தகங்களில்" ஒன்றாக அறிவிக்கப்பட்டது.

இந்த புத்தகம் பல முக்கியப் பிரபலங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களில் ஒருவர் ஸ்டீவ் ஜாப்ஸ். அவர் ஒவ்வொரு வருடமும் இந்தப் புத்தகத்தைப் படித்துவந்ததாகவும், அவரது நினைவேந்தலின்போது இந்தப் புத்தகத்தின் பிரதிகளை வழங்க ஏற்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது. **THE BEATLES** குழுவைச் சேர்ந்த ஜார்ஜ் ஹாரிசன் மற்றும் சேல்ஸ்ஃபோர்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மார்க் பெனியோஃப் போன்றோரும் இந்தப் புத்தகத்தால் ஈர்க்கப்பட்டவர்கள்.

நமது தமிழ் திரையுலகை சார்ந்த திரு. ரஜினிகாந்த் அவர்களால் இந்த புத்தகம் அவரது ரசிகர்களை ஈர்த்ததோடு மட்டுமல்லாது இந்த புத்தகம் கணிசமான இளைஞர்களின் வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது, ஏனென்றால் அந்த இளைஞர்களில் நானும் ஒருவன்.

என்றும் ரோட்டரி சேவையில்,

**Rtn. Hemanth**
**RC Salem Phoenix**

**இது போன்று உங்களுக்கும் உங்கள் விருப்பமான புத்தகத்தை பற்றி இங்கு பகிரலாம்.**

# “மாவட்டத்தின் பெருமை”

**RC Hosur Sipcot** சங்கத்தை சார்ந்த ஆறு எண்டோவ்மென்ட் தானதாரர்கள் – தலைவர் **Rtn.** முத்தையராஜ், செயலாளர் **Rtn.** பிரதீப், **Rtn.** சரவணன், **Rtn.** சுதாகர், **Rtn.** மனோஹர் மற்றும் **Rtn.** உமாசங்கர் ஆகியோர் **Rotary International President Rtn.** பிரான்சிச்கோ அசாரோ அவர்களால் **PRE LEAD 25 -** சென்னை நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

















பெருமைமிக்க எண்டௌமென்ட் பங்களிப்பாளர்களினால் நம் மாவட்டமே பெருமைகொள்கிறது. இவர்களின் பங்களிப்பு வெறும் கொடைகள் அல்ல அது ஆரோக்கியம், கல்வி மற்றும் சமூக வளர்ச்சி போன்ற **Rotary'**ன் நோக்கத்தை பல ஆண்டுகள் நிலையானதாக மாற்றும் முதலீடுகள்.

## குறுக்கெழுத்து போட்டிக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ[1] | டு | வா[2] | ன் | | | | மை[3] | தா[4] |
| கை | | ல | | தொ[5] | | ம[6] | | ர |
| நூ[7] | ற் | று | க் | கு | நூ[8] | று | | கை |
| ல் | | ந் | | இ[9] | ல | க | ம் | |
| | | த | | உ[10] | க | வை | [illegible] | |
| த[11] | ம் | ப | ர் | ப | ம் | | மா[12] | இ[13] |
| ள | | ட் | | ன் | | நி[14] | | று |
| ப | | ப | | பா[15] | ச | றை | | வா |
| இ[16] | ரு | ம் | பி | டு | | | ஆ[17] | ணி |



# மாவட்ட ஆளுநரின் "முதல் அதிகாரப்பூர்வ விஜயம்"



நாமக்கல், ஆகஸ்ட் 27 – ரோட்டரி மாவட்ட ஆளுநர் Er. P. சிவசுந்தரம் அவர்களின் முதல் **Governor's Official Visit - RC Namakkal Poultry Town** சங்கத்தில் தொடங்கியது.

அன்றைய தினம், **RC Namakkal Poultry Town (RID 2982)** மற்றும் **RC Juranda (RID 4630)** இணைந்து, நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேம்பட்ட மருத்துவ உபகரணங்களை வழங்கும் விழாவை நடத்தின.

இந்த முயற்சி Global **Grant Project #GG2351203 (2022-23)** கீழ், **The Rotary Foundation** ஆதரவுடன், மொத்தம் ரூ.**31,51,240/- (USD 38,429)** செலவில் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் சங்கத் தலைவர், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், மருத்துவர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் தலைமையில் மருத்துவ உபகரணங்கள் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன.








## Dist. First Lady Message



அன்பு ரோட்டரி குடும்பத்தினருக்கு,

ரோட்டரியில் பெண்கள் வகிக்கும் முக்கியப் பங்கைப் பற்றி என் எண்ணங்களை பகிர்வதில் பெருமிதம் அடைகிறேன். இன்றைய தேதியில், பெண்கள் ரோட்டரியில் உறுப்பினர்களாக மட்டுமல்லாமல், வாழ்க்கைத்துணையர்களாகவும், உறுதியான ஆதரவாளர்களாகவும் திகழ்கின்றனர். அவர்களின் பங்களிப்பு ஒவ்வொரு திட்டத்திற்கும் அன்பும், படைப்பாற்றலும், பரிவும் சேர்க்கிறது.

பெண்கள் ரோட்டரியின் செயல்பாடுகளில் ஈடுபடும் போது, அது தலைமைத்துவம், திட்ட செயலாக்கம் அல்லது நண்பகளிப்பு ஆகியவற்றில் அதன் தாக்கம் நிச்சயம் அதிகரிக்கும். அன்பையும், பரிவையும் இணைத்து சேவை செய்வதில் அவர்கள் கொண்டிருக்கும் திறன், ரோட்டரியின் பயணத்தை சிறப்பாக மாற்றுகிறது.

எனவே, ஒவ்வொரு பெண் ரோட்டேரியன்களும், Ann உறுப்பினர்களும், தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி, திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பங்கு மற்றும் பங்களிப்பு குடும்பங்களை ஊக்குவித்து, சமூகங்களை வலுப்படுத்தி, ரோட்டரியின் சிந்தனையை வெளிப்படுத்தும்.

நாம் அனைவரும் சேர்ந்து, பெண்கள் மையப்பங்கு வகிக்கும் ஒரு சேவை குடும்பமாக ரோட்டரியை உருவாக்குவோம்.

நன்றியுடனும் பாராட்டுடனும்,

**Rtn. MD. G.K. சுதாமதிதேவி**

# Rotary 2982's Welfare and Foundation Trust

எக்சல் **Convention Centre**-ல் நடைபெற்ற **Dt. Learning Assembly**-ல், சங்க தலைவர்கள் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் **Rotary 2982's Welfare And Foundation Trust** உருவாக்கத்தை ஏற்றுக்கொண்டதற்கிணங்க அதன் முதல் பொதுக்கூட்டம் சங்ககிரியில், ரோட்டரி சங்ககிரி வெஸ்ட் சங்கம் முன்னெடுத்து நடத்தியது.




இந்த கூட்டத்தில் மாவட்டத்தின் **Multi Utility Hall / Vocational Service Centre**-ன் செயல்பாடுகள் மற்றும் எதிர்கால நலத்திட்டங்களை வலுப்படுத்தும் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

# சங்க திட்டங்கள்



RC CHINNASALEM
Annapoorna Day




RC DHARMAPURI ELITE
Motivational Speech to School Students



RC HOSUR GRAND
Donated Dustbins & Buckets



RC HOSUR LEGENDS
Medical Eye Camp



RC HOSUR MIDTOWN
Blood Donation Camp



RC HOSUR ROYALS
Nutrition Food to TB patients



RC JALAGANDAPURAM
Breast Feeding Awareness



RC KALLAKURICHI
Medical Eye Camp



RC Komarapalayam
Chess Tournament



RC METTUR DAM CITY
Plastic Awareness



RC RASIPURAM EDUCATION CITY
Breast Feeding Awareness



RC RASIPURAM ROYAL
Breast Feeding Awareness



RC SALEM
Breast Feeding Awareness




RC SALEM ELITE
Suyamvaram Programme



RC SALEM GUGAI
Breast Feeding Awareness

# சங்க திட்டங்கள்



**RC SALEM JUNCTION**
Nutrition Food Donated to Pregnant Women



**RC SALEM MAJESTIC**
Fridge Donated to PHC Reddiyur



**RC SALEM MAJESTIC**
Donated RO System to Govt. School



**RC SALEM PHOENIX**
RO Plant Donated to Govt. School



**RC SALEM RUPAVATI**
Breast Feeding Awareness




**RC SALEM SUCCESS**
Blood Donation Camp



**RC SALEM SUNRISE**
Donated Medical Aid




**RC SALEM TEXCITY**
Memogram Test




**RC SANKARAPURAM**
Tree Plantation



**RC THIYAGATHURGAM**
Nutrition Food Donated to Pregnant



**RC TINDIVANAM**
Cancer Awareness Camp



**RC TIRUCHENGODE SANGAMAM**
Cooker Donated to Sanitation Workers



**RC ULUNDURPET**
Breast Feeding Awareness



**RC VILLUPURAM**
Breast Feeding Awareness



**RC SALEM YOUNG TOWN**
Drug Awareness Seminar

# சுதந்திரதின விழா கொண்டாட்டம்



RC DHARMAPURI ELITE



RC HOSUR MIDTOWN



KALLAKURICHI INTARACT CLUB



RC KALLAKURICHI



RC RASIPURAM EDUCATIONAL CITY



RC RASIPURAM ROYAL



RC SALEM RUPAVATI



RC SALEM MIRACLE



RC SALEM TEXCITY



RC SALEM



RC SANKARAPURAM



RC VILLUPURAM

# COUNCIL OF GOVERNORS MEET

**Council of Governors - COG** கூட்டம் சேலம் **Hotel Windsor Castle-**ல் ஆகஸ்ட் 5 அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நமது மாவட்டத்தின் முக்கிய திட்டமான **Rotary Multi Utility Hall** குறித்தும், 2025-26-க்கான இலக்குகளை அடைவது குறித்தும் விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.



# சங்க பதவியேற்பு விழா



**RC DHARMAPURI MIDTOWN**
**Rotaract Club of**
**Sakthikailash Woman's College**



**RC MAA NAGAR KRISHNAGIRI**




**RC SALEM METROPOLIS**
**Interact Club of**
**Cluny Vidya Nikethan**



**RC SALEM YOUNG TOWN**
**Rotaract Club of Vasavi**



**RC SALEM GALAXY**
**Rotary Community Corps (RCC),**
**Panaimarathupatty**

# Dt. Conference Team நடத்திய முதல் Regional Meet




**Dt. Conference Team** நடத்திய முதல் **Regional Meet 20.08.2025** அன்று **Salem Rotary Hall-ல்** நடைபெற்றது.

இந்த நிகழ்வை **Dt. Conference Promotion Chairman Rtn. Sureshkumar** அவர்கள் முன்னெடுத்து நடத்தினார்.

இதில் **Dt. Advisor. PDG Rtn.** சுந்தரலிங்கம், **Conference Advisor-**கள் **Rtn. Inbaraj** மற்றும் **Rtn. D.K. Sivakumar, Conference Chairman Rtn. Minnal Kandasamy, Conference Secretary Rtn. Dr. Mathan Karthick, Conference Co-Chairman Rtn. Vinod Babu** உள்ளிட்டோர் கலந்து கொண்டு, மாநாட்டிற்கான இதுவரையிலான பதிவுகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு குறித்து விரிவாக பகிர்ந்தனர்.

மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P. Sivasundaram** அவர்கள் சிறப்புரையாற்றியபோது, மாநாட்டிற்கான ஏற்பாடுகள், வசதிகள், தங்கும் இடம், நிகழ்ச்சிகள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அழகோவியத்தின் பிரமாண்டம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இறுதியாக **Conference Promotion Chairman Rtn. Sureshkumar** அவர்கள், இந்த சிறப்பான மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை தாண்டி அதிகப்படியான பதிவுகள் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் சங்க தலைவர்கள், செயலாளர்கள், உதவி ஆளுநர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பல சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# மாவட்ட நிகழ்வுகள்


Rotary
UNITE FOR GOOD
RID 3231, RID 2982, RID 3206
The president & Members of
RID 3231 - RC GUDIYATHAM
RID 3231 - RC GUDIYATHAM GOLDEN GALAXY
RID 3206 - RC COIMBATORE GREEN CITY
RID 2982 - RC SALEM JUNCTION
RID 2982 - RC SALEM SOUTH
RID 2982 - RC SALEM MAJESTIC
RID 2982 - RC YERCAUD
Cordially invite you for the
MULTI DISTRICT MEET
FUN & FROLIC
FLAG EXCHANGE
FRIENDSHIP EXCHANGE
PROJECTS & ENTERTAINMENT
On Saturday, the 9th August 2025, 4.00 p.m
at Cliffview Resort, Yercaud.
Rtn. Er. P. Sivasundaram
District Governor, RID 2982
Preside over the Function
In the presence of
Rtn. A. Megaraj
Asst. Governor, Zone 1, RID 3231
Rtn. C. Balakrishnan
Asst. Governor, Zone 20, RID 2982
Rtn. K. Shanmugasundaram
Asst. Governor, Zone 23, RID 2982
Felicitation by
Rtn. PDG. AKS. K. Jawarilaljain, RID 3231
Rtn. PDG. C. Sivagnanaselvam, RID 2982
Rtn. PDG. J.K.N. Palani, RID 3231
Event Co-ordinators
Rtn. N.S. Kumaraguru, RID 3231
Rtn. P. Jaghadeesh, RID 2982
Rtn. M. Manoharan, RID 2982
Scan for Location
All are welcome
Yours in Rotary






UNITE FOR GOOD
Rotary




ROTARY CLUB OF TIRUCHENGODE HI-TECH
ROTARY CLUB OF TURUVEKERE
ROTARY CLUB OF TIPTUR


ROTARY CLUB OF TIRUCHENGODE HI-TECH
ROTARY CLUB OF TURUVEKERE
ROTARY CLUB OF TIPTUR
ROTARY CLUB OF NITTUR
IWC OF SANKALPA TURUVEKERE
ROTARY CLUB OF NARTHNAPURI KUNIGAL
Cordially invite you and your family for the
INTER - DIST JOINT CLUBS FAMILY MEET
FLAG EXCHANGE
on 22.08.2025 Friday
at Auditor Office, Velur Road, Tiruchengode.
Chief Guest
Guest Of Honor
In the presence of
Your Participation is our Pleasure
Ever in Rotary Service
ROTARY CLUB OF TIRUCHENGODE HI-TECH - TEAM 2025-2026

# Rotary.org & Rotary India App Training Programme

**RI Dt 2982** மற்றும் **R.C.Namakkal Educational City** இணைந்து **Rotary.org & Rotary India App (RI Zone 4, 5, 6 & 7)** குறித்த கணினி / மொபைல் ஆப் பயிற்சி நிகழ்ச்சியை நாமக்கல் திருச்சி சாலையிலுள்ள கொங்குநாடு இன்ஜினியரிங் கல்லூரியில் ஆகஸ்ட் 2, 2025, சனிக்கிழமை அன்று காலை 9.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடத்தியது.




இந்தப் பயிற்சி நிகழ்ச்சி, உதவி ஆளுநர்கள், **Dt Chairs,** சங்க தலைவர்கள் மற்றும் செயலர்களுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியை **Rtn. S. Usha, Relationship Manager, Rotary India App** மற்றும் **RID 2982** ஆளுநர்கள் குழு இணைந்து வழிநடத்தினர்.

மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் இந்த நிகழ்ச்சியைப் பாராட்டி, ரோட்டரி தலைவர்கள் டிஜிட்டல் கருவிகளை சிறப்பாகப் பயன்படுத்தி நிர்வாக திறனையும் இணைப்பையும் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த பயிற்சி பெரிதும் உதவியாக இருந்தது என்று புகழாரம் சூட்டினார்.









Rotary

# கேள்வி களஞ்சியம்




கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை டிக் செய்து 9894698936 இந்த எண்ணிற்கு **Whatsapp** செய்வோர் அடுத்த இதழில் அவர்களின் பெயரை "வெற்றி வாசகர்" என்று கௌரவிக்கப்படுவர்.

1. சென்னையில் நடந்த **LEADS 25'**ல் நம் மாவட்டத்தை சார்ந்த எத்தனை **Endowment Donors** கௌரவிக்கப்பட்டனர்?

   1) 6 2) 8 3) 2 4) 3

2. "வணக்கம் ரோட்டரி" இரண்டாவது **GML** எந்த **Seminar-**ல் வெளியிடப்பட்டது?

   1) Foundation Seminar 2) Membership Seminar 3) Administration Seminar 4) Service Project Seminar

3. 2982 மாவட்டத்தின் **First Lady Rtn. GK. Sudhamathidevi** தனது **Message** பகுதியில் யாருடைய பங்கு முக்கியம் என்று குறிப்பிட்டுள்ளார்

   1) ஆண்கள் 2) பெண்கள் 3) குழந்தைகள் 4) யாருமில்லை

4. மாவட்டத்தின் முதல் **Governor's Official Visit** எந்த சங்கத்துடன் நடந்தது?

   1) RC Salem 2) RC Hosur 3) RC Namakkal Poultrytown 4) RC Namakkal Heritage

5. **International Fellowship of Rotarian Musician, Chapter'**ன் பெயர் என்ன?

   1) Music 2) Thaalam 3) Raagam 4) Paadal

6. சங்க தலைவர், சங்க செயலாளர் மற்றும் **Chairperson**க்கு **Rotary.org & Rotary India App – Training Programme** எங்கு நடந்தது?

   1) Excel Eng College 2) Kongunadu Eng College 3) Rotary Hall 4) Online

7. எதிர் வரும் "அழகோவியம்" **Conference `**ன் **Dt. Promotion Chair** யார்?

   1) Rtn. Sureshkumar 2) Rtn. Vishwanathan 3) Rtn. K.P. Ravichandran 4) Rtn. Manian

8. இந்த இதழில் இடம்பெற்ற **`STAR PROJECT'** எந்த சங்கம் நடத்திய திட்டம்.

   1) Rc Kallakurichi 2) RC Attur Midtown 3) RC Rasipuram 4) RC Dindivanam

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் இந்த இதழில் இருந்தே எடுக்கப்பட்டவை**

## சென்ற மாத கேள்வி களஞ்சியத்தின்

### வெற்றி வாசகர்கள்



**Rtn. Boopalan**
RC Rasipuram Royal



**Rtn.S. Ragavendran**
RC Attur



**Rtn. K. Gunasekaran**
RC Rasipuram



**Rtn.K.V.Devarajan**
RC Sankarapuram



**Rtn. Raja**
RC Attur



**Rtn. Arumugam**
RC Sankarapuram



**Rtn. Mohanraj**
RC Salem Smart City



**Rtn. S. Umarani**
RC Omalur



**Rtn. Dr. P. Sangeethkumar**
RC Salem


Christy



Nalaas

சத்துமாவு

**Christy Group of Companies**

A-2, A -3, SIDCO Industrial Estate, Andipalayam,
Tiruchengode - 637 214, Namakkal District. Tamil Nadu. INDIA.

: 04288 288900 info@christygroup.in www.christyfoods.in

**Christy Quality Foods (I) Pvt Ltd**

44/1, Bhavani By Pass Road,Chithode, Erode - 638102 For Enguires : 0424 2533150, 2533151

ROTARY INTERNATIONAL DISTRICT 2982

Rotary | UNITE FOR GOOD | TEAM UNIQUE



**Rtn. Paul Harris**
Founder of Rotary



**Rtn. Francesco Arezzo**
RI President



**Rtn. Er. P. Sivasundaram**
District Governor



**Rtn. AKS. Prof. Dr. A.K. Natesan**
Chairman



**Rtn. K. Sivakumar**
President



**Rtn. C. Panneerselvam**
Secretary



**Rtn. C. Senthilkumar**
DGE, RI Dist. 2982

## ROTARY INTERNATIONAL DISTRICT 2982

# PROPOSED CONVENTION CENTRE

## MULTI UTILITY HALL / VOCATIONAL SERVICE CENTRE

**Location : Sankagiri**

| Rupees 10 Lakhs | Rupees 5 Lakhs | Rupees 2 Lakhs | Rupees 1 Lakh |
|---|---|---|---|
| Founder Trustee | Executive Trustee | Trustee | Member |



Rotary Dist.2982

TEAM UNIQUE

# ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

# அழகோவியம்

2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

*Organised by...*

## ROTARY CLUB OF KOMARAPALAYAM

DATE

**26, 27, 28 DECEMBER 2025**

FOUR POINTS BY SHERATON

RESORT & CONVENTION CE

MAHABALIPURAM

REGISTER NOW

https : //rotary2982.org/conference_registration/



**Rtn. Paul Harris**
Founder of Rotary



**Rtn. Francesco-Arezzo**
Rotary International President, 2025 - 26



**Rtn. Er. P. Sivasundaram**
District Governor, 2025 - 26



**Rtn. Minnal N. Kandasamy**
Conference Chairman



**Rtn. Dr. N. Mathan Karthick**
Conference Secretary

## Advisors



**Rtn. K. Inbaraj**
Rc of Salem Central



**Rtn. D. K. Sivakumar**
Rc of Salem South



**Rtn. R.R. Prasad**
Rc of Redrock



**Rtn. K. P. Saravanan**
Rc of Namakkal Heritage

## Conference Promotion Committee



**Rtn. S. Sureshkumar**
RC of Namakkal Poultry Town
Chairman



**Rtn. C. Sampathkumar**
RC of Jalakandapuram
Regional Chairman



**Rtn. D. Rajkumar**
RC of Namakkal
Transport City
Regional Chairman



**Rtn. N. Sudhakaran**
RC of Sankarapuram
Regional Chairman



**Rtn. Dollars Manjunath**
RC of Hosur Midtown
Regional Chairman



**Rtn. T. Eswarakumar**
RC of Salem
Regional Chairman

## Conference Registration Committee



**Rtn M. Viswanathan**
RC of Mohanur
Chairman



**Rtn S.Jaiganesh**
RC of Tiruchengodu Redrock
Regional Chairman



**Rtn. C. Sengottuvelu**
RC of Namakkal Evergreen City
Regional Chairman




**Rtn. J. Natarajan**
RC of Chinnasalem
Regional Chairman



**Rtn. R. Sudharsan**
RC of Hosur Sipcot
Regional Chairman



**Rtn. M.Kesavaraj**
RC of Salem Phonenix
Regional Chairman




Owned, Published & Printed by **P.JAGADEESH** Published from NO.11/16, CALICUT MAIN ROAD, NALLAPPAN THOTTAM, JARI KONDALAMPATTY, SALEM,TAMIL NADU - 636010

Printed at **SEAMAN GRAPHICS,** 7/253,K.V.N. Puram 2nd Street, Kilpauk Garden, Chennai - 600010.

Editor : **P.JAGADEESH**

# STAY & Meeting @ SALEM

SELVAMATHI
FARM RESORTS

Rotary

RMB

# Selvamathi Farm Resorts

✦ Meeting Hall ✦ Luxury Rooms ✦ Swimming Pool ✦ Loving Pets ✦ Natural Studio
✦ Rainshower ✦ Party Lawn ✦ Village huts ✦ 250 Varieties of Trees








Masinaikenpatti (PO), Ayothiyapattanam (Via), Salem-636103.

For Bookings **99525 09812**

SRET EXCEL

# Excel GROUP INSTITUTIONS

Approved by AICTE, CoA, NCTE, AYUSH, NCH, NCISM, PCI, TNNMC, NCVT, New Delhi &
Affiliated with Anna University & DoTE, The TN Dr. M.G.R. Medical University, DPH, TNTEU, Chennai, Periyar University, Salem

## ENGINEERING - AUTONOMOUS

B.E. | B.TECH. - SAFETY & FIRE | AGRI | AERO | BIOMEDICAL | CIVIL | MECH | CSE | EEE
ECE | FOOD TECHNOLOGY | IT | PETROCHEMICAL | ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE
ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
COMPUTER SCIENCE & BUSINESS SYSTEMS | M.E. - ALL BRANCHES
Ph.D. - CSE | ECE | MECH | PHYSICS
M.Tech. - CSE - 5 Years (After+2)

A+ NAAC | NBA | 2634 Counselling Code

## 3/2 YEARS DIPLOMA COURSES

AUTO | MECH | CIVIL | ECE | EEE
COMPUTER ENGINEERING | MEDICAL LAB TECHNOLOGY
TECHNICIAN X-RAY TECHNOLOY

## BUSINESS SCHOOL - AUTONOMOUS

M.B.A. | M.C.A. - 2 Years (After Degree)
M.B.A. - 5 Years (After+2)

## ARCHITECTURE

Counselling Code 2667

B.ARCH. | M.ARCH.

## EDUCATION

B.Ed. | M.Ed.

## COMMERCE & SCIENCE

B.A. - TAMIL, ENGLISH | B.Com. | B.Com. - CA | B.Com. - AF | B.Com. - PA | B.Com. - IT
B.B.A. | B.Sc. - BIOCHEMISTRY | COMPUTER SCIENCE | MICROBIOLOGY | DATA SCIENCE
VISUAL COMMUNICATION | COSTUME DESIGN & FASHION | TEXTILE & FASHION DESIGNING
ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE | CYBER SECURITY | INFORMATION TECHNOLOGY
CLINICAL LABORATORY TECHNOLOGY | ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
B.C.A. | M.Com. | M.A. ENGLISH | M.Sc. - MICROBIOLOGY | COMPUTER SCIENCE
TEXTILE & FASHION DESIGNING | M.S.W.

1103 Offers | 1004 Students Placed

## B.H.M.S.
## B.S.M.S.
## B.N.Y.S.

Naturopathy & Yoga - NEET Not Neceesary

PHARM.D.
M.PHARM. Pharmaceutics Pharmacy Practice
B.PHARM. | D.PHARM.
B.P.T. - PHYSIOTHERAPY
B.O.T. - OCCUPATIONAL THERAPY*
B.Sc. - NURSING (Male / Female)
GNM | HEALTH INSPECTOR
B.Sc. - R.I.T. | M.L.T.

NH-544, Salem - Coimbatore Highway, Komarapalayam - 637 303
+91 98427 13789
excelinstitutions.com

# தி காவிரி கல்வி நிறுவனங்கள்

மேச்சேரி, சேலம் - 636 453.

ACCREDITED WITH GRADE A+ CGPA 3.47 NAAC

## பொறியியல் கல்லூரி (Autonomous)

### B.E.

Counselling Code 2625

- Biomedical Engineering
- Civil Engineering
- Computer Science Engg.
- Electrical & Electronics Engg.
- Electronics & Communication Engg.
- Mechanical Engineering

### B.Tech.

- Artificial Intelligence and Data Science
- Information Technology
- Chemical Engineering
- Agricultural Engineering

## பாலிடெக்னிக் கல்லூரி

- Medical Laboratory Technology
- Artificial Intelligence & Machine Learning
- Agricultural Engineering
- Fire Technology and Safety
- Chemical Engineering
- Civil Engineering
- Mechanical (T&D) Engg.
- Computer Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronics Engg.
- Electronics & Commun. Engg.

B.Ed. & M.Ed.

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

B.A. - Tamil - English BCA BBA
B.Com. (CA) B.Com. M.Com.
B.Sc. - Chemistry - Microbiology - Computer Science - Nutrition and Dietetics - Computer Science (AI & DS)
M.Sc. - Microbiology

NURSING COLLEGE
B.Sc. - Nursing | DGNM
PHARMACY COLLEGE
B.Pharm | D.Pharm
PHYSIOTHERAPY COLLEGE
HEALTH SCIENCE

95249 36156

INSHA, 9894640139





Rtn. So. Kannan
District Publication Chair
Cell : 94431 88896





Rtn. M. Shanavas
District Publication Co-Chair
Cell : 98946 40139





Rtn. S. Hemanth
District GML Chair
Cell : 98946 98936